# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2008 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2008 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*


அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

**2008, மே மாதம் 02 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 10.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2008 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2008 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஒ. (கூட்.) 27/2006

### தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா நிறுவனத்தை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா நிறுவனம் என அறியப்படுவதும் அழைக்கப்படுவதுமான நிறுவனமொன்று சொல்லப்பட்ட நிறுவனத்துடன் தொடர்புடைய எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் அதன் உறுப்பினர்களால் உடன்பட்டுக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்காக இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள தாலும் :

சொல்லப்பட்ட நிறுவனமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ள தாதலாலும் அத்தகைய விண்ணப்பத்தை அனுமதிப்பது பொதுமக்களின் நன்மைக்காதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்.

**1.** இச்சட்டம் 2008 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா நிறுவனத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் "நிறுவனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா நிறுவனத்தின் உறுப்பினர்களாக இப்பொழுதுள்ள அல்லது இத்தால் உருவாக்கப்படும் கூட்டுத் தாபனத்தின் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) உறுப்பினர்களாக இதன் பின்னர் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகைய அத்தனை ஆட்களும் தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா நிறுவனம் என்ற பெயர் மகுடத்தின்கீழ்

இடையறா வழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருக்க வேண்டும் என்பதுடன் அது அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அதனை மாற்றியமைக்கவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்களாவன :

(அ) இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றுவோர்களிடையே புனித குர்ஆனினதும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சுன்னாவினதும் போதனைகளின் அடிப்படையில் இஸ்லாமிய மார்க்கத்தைப் பற்றிய அறிவை ஊக்குவித்தலும் பேணிக்காத்தலும் இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றிய ஆராய்ச்சிக்கும் கற்கைக்கும் உற்சாகமளித்தலும் ;

(ஆ) இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றுவோர்களிடையே இஸ்லாத்தைப் பற்றி கற்குமாறும் அவர்கள் இஸ்லாத்தின் செய்தியைப் பரப்புவதற்கான அறிவைப் பெறுமாறும் நிறுவகத்தின் மாணவர்களைப் பயிற்றுவிப்பதும் அபிவிருத்தி செய்வதும் ;

(இ) இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றுவோர்களிடையே இஸ்லாமிய மார்க்கத்தை ஊக்குவிப்பதற்கென நூல்கள், சஞ்சிகைகள், மஞ்சரிகள், பருவவெளியீடுகள், துண்டுப் பிரசுரங்கள், செய்தித்தாள்கள், ஒலி ஒளி மற்றும் இறுவட்டுகள் பல்லின ஊடகச் சாதனங்கள் என்பவற்றை ஆங்கிலம், சிங்களம், தமிழ், அரபு ஆகிய மொழிகளில் அச்சடித்தலும் வெளியிடுதலும் விநியோகித்தலும் ;

(ஈ) இஸ்லாமிய அறிவை மேம்படுத்துவதற்கும் இஸ்லாமியக் கோட்பாடுகளின் செயல்முறை அனுட்டானத்தை ஊக்குவிப்பதற்குமாக மாணவர்கள் மற்றும் முஸ்லிம் சமுதாயத்தின் மத்தியில் வகுப்புக்கள், கூட்டங்கள், கருத்தரங்குகள், ஆய்வரங்குகள், அமர்வுகள் என்பவற்றை ஒழுங்குசெய்தலும் நடத்துதலும் ;

(உ) இலங்கையிலுள்ள முஸ்லிம் சமுதாயத்தின் கல்வி, சமூக, பொருளாதார நலனுக்குத் தேவையான உதவியையும் வசதிகளையும் வழங்குதல் ; அத்துடன்

(ஊ) இலங்கையிலும் இலங்கைக்கு வெளியேயும் இவற்றையொத்த முயற்சிகளில் ஈடுபட்டுள்ள வேறு இஸ்லாமிய நிறுவனங்களுடன் நட்புறவியல் உறவுகளைத் தாபித்தலும் பேணுதலும் உதவிகளைப் பெறுதலும் வழங்குதலும்.

4. கூட்டுத்தாபனம் இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய — கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

(அ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முன்னேற்றுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு தேவைப்படக்கூடிய காணிகளை அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்வதற்கு, தேவைக்கெடுப்பதற்கு, வாடகைக்குப் பெறுவதற்கு, நிர்மாணிப்பதற்கு அல்லது வேறு வகையில் பெற்றுக்கொள்வதற்கும் ; அத்துடன் அது உசிதமானதெனக் கருதக்கூடியவாறு அதனைக் கையாள்வதற்கும் அல்லது கையுதிர்ப்பதற்கும் ;

(ஆ) கூட்டுத்தானத்தின் நோக்கங்களுக்கு எவரேனும் ஆளிடமிருந்து அல்லது கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ்சரி வேறுவகையிலாயினுஞ்சரி ஆட்கள் குழுவிடமிருந்து எல்லாவிதமான ஒப்படைப்பணங்களையும் மானியங்களையும் நன்கொடைகளையும் கொடைகளையும் பரிந்து கேட்பதற்கும் திரட்டுவதற்கும் பெறுவதற்கும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு அவசியமாகக் கூடிவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிப்பதற்கும் ஊதியம் வழங்குவதற்கும் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்கும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் நோக்கத்திற்கு பணம் திரட்டுவதற்கும் அல்லது கடனெடுப்பதற்கும் கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் தனிசை அல்லது கடப்பாட்டை அது பொருத்தமானதெனக் கருதக்கூடிய அத்தகைய முறையில் நிறைவேற்றுவிப்பதற்கும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை முகாமைச்சபை பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலிடுசெய்வதற்கும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்கு கூட்டுத்தாபனத்தின் அனுசரணையில் நடத்தப்படுவனவும் கூட்டுத்தாபனத்தால் நடத்தப்படுபவையுமான பல்வேறு செயற்பாடுகளுக்கும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் கருத்திட்டங்களுக்கும் வெவ்வேறு கிளைகளையும் நிறுவனங்களையும் தாபித்தல், ஒழுங்குசெய்தல் அத்துடன் பேணுவதற்கும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்குத் தேவைப்படும் எவையேனும் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கும் மாற்றுவதற்கும் பேணுவதற்கும் ;

(ஏ) ஏதேனும் அசைவற்ற அல்லது ஆளுக்குரிய ஆதனத்தைப் பாதிக்கும் எவையேனும் சட்டபூர்வமான நம்பிக்கைப்பொறுப்புக்களையும் நிபந்தனைகளையும் பொறுப்பேற்பதற்கும், ஏற்றுக்கொள்வதற்கும், நிறைவேற்றுவதற்கும், புரிவதற்கும், நிர்வகிப்பதற்கும் ;

(ஐ) ஏதேனும் தருமநோக்கத்திற்கு பணத்தை ஒப்பப்பணமாகச் செலுத்துவதற்கும் அல்லது நன்கொடையளிப்பதற்கும் ;

(ஒ) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் அல்லது கூட்டுத்தாபனத்தின் அலுவல்களைக் கொண்டுநடாத்துவதற்கும் அல்லது அதன் குறிக்கோள்களை முன்னெடுத்துச்செல்வதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் நேரடியாகவோ அல்லது கூட்டுத்தாபனத்தால் அதன் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட அதன் அலுவலர்கள் அல்லது சேவையாளர்கள் அல்லது முகவர்கள் ஊடாகவோ செய்துகொள்ளுவதற்கும் புரிவதற்கும் ;

(ஓ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஊக்குவிப்பதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமாகக்கூடியவாறான அல்லது அவசியமாகின்றவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் விடயங்களையும் செய்வதற்கும்.

**5.** (அ) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியங்கள் என்றவகையில் இதற்கு முன்னர் அல்லது இதன் பின்னர் கூட்டுத்தாபனத்திற்காகவும் அதன் கணக்கிலும் பெறப்படும் எல்லாப் பணங்களும் முகாமைச்சபை தீர்மானிக்கவேண்டியவாறு ஒரு வங்கியில் அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவில் வைப்பீடுசெய்யப்படுதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

(ஆ) கூட்டுத்தாபனம் கூட்டுத்தாபனத்தின் எல்லா அல்லது எவையேனும் குறிக்கோள்களை எய்தும்நோக்கத்திற்கு வெவ்வேறு விதமான நிதியங்களைத் தாபிக்கலாம்.

(இ) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனம் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் நிறைவேற்றுகையிலும் புரிகையிலும் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தை ஈடுசெய்வதற்கான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**6.** கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை மரணசாதனக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக் கொண்டு அதற்குரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை கையேற்கவும் வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றலுடையதாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படுதல் வேண்டும். கூட்டுத்தாபனம், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய அதனை விற்பனை செய்வதற்கு, குத்தகைக்கு விடுவதற்கு, வாடகைக்கு விடுவதற்கு, கொடுத்துமாற்றுவதற்கு அல்லது வேறுவகையில் கையுதிர்ப்பதற்கு முழுத்தத்துவமுடையதாதல் வேண்டும். கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.

**7.** கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் 11 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கும் அமைய முகாமைக் குழுவொன்றால் நிருவகிக்கப்படுதல் வேண்டும். முகாமைச்சபை கூட்டுத்தாபனத்தின் விதிகளின் நியதிகளின்படி தெரிவுசெய்யப்படும். கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச்சபை இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கும் தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா நிறுவனத்தின் முகாமைச் சபையாதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

கூட்டுத்தாபனம் இலாப நோக்கில்லாத ஒரு ஒழுங்கமைப்பாதல் வேண்டும்.

8. கூட்டுத்தாபனத்தின் பணங்களும் ஆதனமும் அவை எவ்வாறு பெறப்பட்டனவாயினும் இதன்கண் தரப்பட்டுள்ள அதன் குறிக்கோள்களை ஊக்குவிப்பதற்கு மாத்திரமே பிரயோகிக் கப்படுதல் வேண்டும் என்பதுடன் அதன் ஏதேனும் பாகம், எவ் வாறாயினும், பங்கிலாபம், கடன், மிகையூதியம் என்ற வகையில் அல்லது வேறுவகையில் எவ்வாறாயினும் இலாபம் என்ற வகையில் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கு நேரடி யாகவோ அல்லது மறைமுகமாகவோ செலுத்தப்படுதலோ அல்லது மாற்றப்படுதலோ ஆகாது.

ஆயினும் எவ்வாறாயினும் இப்பிரிவின் ஏற்பாடு –

(அ) கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு நல்லெண்ணத்துடன் நியாய மானதும் முறையானதுமான வேதனத்தின் அல்லது கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினருக்கு அவரால் கூட்டுத்தாபனத்திற்கு ஆற்றப்பட்ட ஏதேனும் சேவைக் கொடுப்பனவை ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினரால் அல் லது கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒருவர் எந்தக் கம்பெனியின் பங்குதாரர் ஒருவராக இருக்கின்றாரோ அந்தக் கம்பெனியால் கூட்டுத்தாபனத்துக்கு வாட கைக்கு விடப்படும் வளவுகளுக்கு நியாயமானதும் முறையானதுமான வாடகையின் கொடுப்பனவை ; அத்துடன்

(இ) கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினரால், அல்லது ஊழியரால் அவரது பணிகளை அல்லது கடமைகளைப் புரிகையில் அல்லது நிறைவேற்றுகையில் அல்லது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முன்னேற்றுவதில் முகாமைச்சபை யின் முன்னங்கீகாரத்துடன் உறப்பட்ட நியாயமான வையும் முறையானவையுமான செலவுகளின் செலவீட்டை அல்லது மீள்கொடுப்பனவை,

தடைசெய்தலாகாது.

கூட்டுத்தாபனத்துக்கு வருமதியானதும் அதனால் கொடுபடற்பாலதுமான தனிசு.

**9.** இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று நிறுவனத்திற்கிருந்த தனிசுகள், பொறுப்புக்கள் அனைத்தும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தினத்தில் நிறுவனத்திற்கு செலுத்தப்படற்பாலதான எல்லாத் தனிசுகளும் ஒப்பப்பணங்களும் உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் கணக்காய்வும்.

**10.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வரவு, செலவு, சொத்துக்கள் பொறுப்புக்கள் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய தகுந்த கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் ஐந்தொகையும் ஆகக் குறைந்தது ஆண்டிற்கு ஒருதடவையாவது கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்பட்ட எவரேனும் தகைமைபெற்ற கணக்காய்வாளரால் அல்லது கணக்காய்வாளர்களால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் ஐந்தொகையும் நியாயமான எல்லா நேரங்களிலும் கூட்டுத்தாபன உறுப்பினர்களால் பரிசீலனை செய்யப்படுவதற்கிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**11.** (1) காலத்துக்குக்காலம் கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கும், உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத பெரும்பான்மையொன்றினால் இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாயிரத விதிகளை ஆக்குவது கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதி என்றாற்போன்று அதேபோன்றதொரு கூட்டத்திலும் அதே முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதனுடன் எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

கலைத்தலின் மீது எஞ்சியுள்ள ஆதனம்.

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன் மீது, அதன் எல்லா தனிசுகளும் பொறுப்புகளும் செலுத்தித் தீர்க்கப்பட்டதன் பின்னர் ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது, ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களை உடையதும் அல்லது உடையனவும் வருமானத்தை அல்லது இலாபத்தை அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிப்பதை அதன் அல்லது அவற்றின் விதிகளால் தடைசெய்யப்பட்டுள்ளதும் அல்லது தடைசெய்யப்பட்டுள்ளவையுமான வேறு ஏதேனும் நிறுவனத்தின் அல்லது நிறுவனங்களுக்கு வழங்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்தில் அல்லது கலைக்கப்படும் நேரத்திற்கு உடன்முன்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**13.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினை கூட்டுத்தாபனத்தின் முகாமைச்சபையின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அத்தாட்சியாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்விதம் கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியொருவராகக் கையொப்பமிடுவதினின்று தனிவேறாதல் வேண்டும்.

குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளின் பாதுகாப்பு.

**14.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் மக்கள்குழு அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ, பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்